

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | ஆகஸ்டு 18, 2022 | புரட்சி 21 | முழக்கம் 31 | விலை: ரூ.3.00

# தேவை, தேசபக்தி சட்டத்திருத்தம்

அந்த காலங்களில் கதர் குல்லாவுடன் பிரிட்டிஷ் கால தேச பக்தர்கள் ‘பாரத மாதாக்கி ஜே’ என்று முழக்கம் போடுவார்கள். அவர்கள் கையில் காங்கிரஸ் கொடி இருக்கும். இது ‘வாடகை’ தேசபக்தியாளர்கள் காலம்! ஒரு கையில் பாதுகையை (அதாவது செருப்பை) வைத்துக் கொண்டு ‘பாரத மாதாக்கி ஜே’ என்று கூச்சல் போடுகிறார்கள். தேசியக் கொடி பறக்கும் அமைச்சர் கார் மீதே அந்த ‘ஆயுதத்தை’ வீசினார்கள். இனி செருப்புக்கு எங்கள் ஆட்சியில் எப்போதுமே ஜி.எஸ்.டி. கிடையாது. அது தேசபக்தியின் அடையாளம் என்றுகூட அமைச்சர் நிர்மலாவிடமிருந்து அறிவிப்பு வரலாம்.

ஆமாம்! மதுரையில் தேசியக் கொடியுடன் வந்த அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் கார் மீது செருப்பு வீசியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் யார்? அதெல்லாம் பா.ஜ.க.வாக இருக்க முடியாது. விசாரணைக்குப் பிறகு தான் தெரியும் என்கிறார் ஒன்றிய அமைச்சர் முருகன்.

பா.ஜ.க.வின் இந்த வெறுப்பு அரசியலை இனியும் சகிக்க முடியாது. எனவே பா.ஜ.க.வுக்கே முழுக்குப் போட்டு விட்டேன் என்கிறார் அக்கட்சி மதுரை மாவட்டத் தலைவர் சரவணன். அமைச்சரை சந்தித்து மன்னிப்பும் கேட்டேன் என்கிறார். நீங்கள் விலகினாலும் நான் தான் கட்சியிலிருந்து நீக்குவேன். அதெல்லாம் எனது அதிகாரத்தை நான் விட்டுக் கொடுக்க முடியாது. இதோ ‘சரவணன் டிஸ்மிஸ்’ என்கிறார் அண்ணாமலை.

காஷ்மீர் தீவிரவாதிகள் சுட்டதில் பலியான இராணுவ வீரர் மதுரையைச் சார்ந்த தமிழர். அவருக்கு முதல் மரியாதை செய்ய, இராணுவத்தைவிட, தமிழ்நாடு அமைச்சரை விட எங்களுக்குத் தான் முன்னுரிமை தர வேண்டும் என்பது அண்ணாமலையின் வாதம்! அதுவும் சரி தான் என்பதே நமது கருத்து.” காஷ்மீர் என்ற மாநிலத்தையே ஒழித்தது யார்? நாங்கள் தானே? அதை வெறும் யூனியன் பிரதேசம் என்று மாற்றியது யார்? நாங்கள் தானே! அதை நாங்கள் செய்த காரணத்தினால் தானே தீவிரவாதிகள் தாக்குதல் அதிகரித்தது! அதன் காரணமாகத் தானே தமிழ்நாட்டு இராணுவ வீரர் இறந்தார்? இப்படி படாதபாடுபட்டு தீவிரவாதத்தை வளர்த்து விட்டது நாங்கள். அதனால் தான் தமிழ்நாட்டு இராணுவ வீரர் பலியாக முடிந்தது. இதை எல்லாம் மறந்துவிட்டு, எங்களின் தியாகத்தில் நீங்கள் குளிர் காயப் பார்த்தால், நாங்கள் விட்டு விடுவோமா? நாங்கள் என்ன ஏமாளிகளா? நாங்கள் தான் தீவிரவாதிகளை உசுப்பி விட்ட அசல் தேசபக்தர்களாக்கும்; விட மாட்டோம் என்று வீரம் பேசலாம் அண்ணாமலை.

பா.ஜ.க.வினர் ஒன்றும் விவரம் தெரியாதவர்கள் அல்ல. இதோ பாருங்கள் திருவாரூர் மாவட்டத்தில் ஒரு பா.ஜ.க. தலைவர் தான் எழுத வேண்டிய தேர்வுக்கு வேறு ஒரு ஆளைப் பிடித்து, எழுதச் செய்திருக்கிறார். இதற்கு மற்றொரு பா.ஜ.க. தலைவர் ஏற்பாடு செய்துள்ளார். மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்தி வந்துள்ளது. உடந்தையாக ஏற்பாடுகளைச் செய்த பா.ஜ.க. தலைவர் என்ன பொறுப்பில் இருக்கிறார் தெரியுமா? பா.ஜ.க.வின் கல்வித் துறைக்கு பொறுப்பு வகிப்பவர். பொறுப்போடு ‘கல்வி’த் துறையில் புரட்சி செய்யலாம் என்று ஆள் மாறாட்டத்துக்கு உதவியுள்ளார். இது ஒரு குற்றமா? இதைக்கூட ‘திராவிட மாடல்’ ஆட்சி குற்றம் என்கிறது. பாரத மாதாவுக்கு எவ்வளவு அவமானம்? அதனால்தான் அண்ணாமலை தேச பக்தியோடு அவரை கட்சியிலிருந்து நீக்கவில்லை. இப்படி எல்லாம் ‘தேசபக்தர்களை’த் தொடர்ந்து பழி வாங்கக் கூடாது. அதற்கு ஒரு நல்ல யோசனை நம்மிடம் இருக்கிறது சார்! கிரிமினல், மோசடி, மதக்கலவரம், போதைப் பொருள் கடத்தல், ஆள் மாறாட்டம் என்று ‘தேசபக்த சேவை’யில் ஈடுபடும் பா.ஜ.க.வினர்மீது தமிழ்நாட்டில் எந்த வழக்கும் போடக் கூடாது; அதை நீதிமன்றங்களிலும் விசாரிக்கக் கூடாது என்று நாடாளுமன்றத்தில் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்தால் போதும்.

எதிர்கட்சிகள் எதிர்பார்ப்பார்களே என்று கவலை வேண்டாம். அவர்களை அவைத் தலைவர் உத்தரவின் வழியாக வெளியே தூக்கிப்போட்டு விடலாம். மிஞ்சி மிஞ்சிப் போனால் எதிர்கட்சிகள் காந்தி சிலை முன் கூடி ஆர்ப்பாட்டம் நடத்துவார்கள். அவ்வளவுதான். அதுவா முக்கியம்? பாரத மாதாவையும் ‘பாரதீயத்தையும்’ காப்பாற்றியாக வேண்டுமே!

இந்த நல்ல ஆலோசனையை பரிசீலியுங்கள் அண்ணாமலை ஜி!

**– கோடங்குடி மாரிமுத்து**

### பரப்புரை செயலாளர் பால். பிரபாகரன் உரை

# தமிழை மதத்திலிருந்து பிரிக்கச் சொன்னார், பெரியார்

*கழகத்தின் சார்பில், களப்பணியாளர் களுக்கான மூன்று நாள் பயிற்சி வகுப்பு திருச்சியில் ஜூலை 23-25 வரை நடைபெற்றது. பயிற்சி வகுப்பில் “பெரியார் தமிழுக்கு செய்த தொண்டு” என்ற தலைப்பில் தமிழை மதத்திலிருந்து பிரித்தால் தான் மொழி தமிழரின் தன்மானத்துக்கு அடையாளமாக முடியும் என்று பெரியார் கூறியதை விளக்கி கழகப் பரப்புரை செயலாளர் பால் பிரபாகரன் ஆற்றிய உரை.*



பெரியார் என்று கூறினாலே, ’தமிழுக்கு எதிரானவர்’ என்ற விமர்சனம் தொடர்ந்து வைக்கப்பட்டே வருகிறது. முதலில் பெரியார் தமிழரே இல்லை. அவர் ஒரு கன்னடர். கன்னடர் எப்படி தமிழுக்கு தொண்டாற்ற முடியும் என்றும் விமர்சனங்களை வைக்கிறார்கள். பெரியார் தமிழை காட்டுமிராண்டி மொழி என்று கூறி விட்டார் என்று மணியரசன் போன்ற அறிவுஜீவிகளெல்லாம் கூறி வருகின்றனர். பெரியார் ஏன் திராவிடர் கழகம் என்று பெயர் வைத்தார் ? தமிழர் கழகம் என்று வைத்திருந்தால் தமிழர் விடுதலை சாத்தியமாகியிருக்குமே என்றெல்லாம் இந்த அறிவுஜீவிகள் பேசுகிறார்கள். மேலும், எல்லைப் போராட்டத்தில் பெரியார் கலந்து கொள்ளவில்லை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் பெரியார் ‘தமிழுக்கு எதிரி’ என்று வைக்கப்படுகிறது. பெரியார் தமிழைப் பற்றி என்ன கூறியிருக்கிறார் என்பதை விட மொழி குறித்து பெரியார் என்ன பார்வை வைத்திருந்தார் என்பதை நாம் பார்க்க வேண்டும் .

பெரியார், “பொதுத் தொண்டாற்றுபவனுக்கு நாட்டுப் பற்று இருக்கக் கூடாது, மொழிப் பற்று இருக்கக் கூடாது, கடவுள் பற்று இருக்கக் கூடாது, மதப் பற்று இருக்கக் கூடாது, சாஸ்திரப் பற்று இருக்கக் கூடாது, ஜாதிப் பற்று இருக்கக் கூடாது; மொத்தத்தில் மனிதப் பற்றைத் தவிர வேறு எந்த பற்றும் இருக்கக் கூடாது” என்றார். எனக்குத் தேவையெல்லாம் தமிழரின் நலமும், சுயமரியாதையும் தானே தவிர மொழியைப் பற்றி எந்த அக்கறையும் இல்லை என்கிறார் பெரியார்.

தமிழ் மொழியில் வடமொழி சொற்கள் கலப்பதால் இழிவு ஏற்படுகிறது, எனவே தமிழ் மொழியுடன் வேறு மொழி கலப்பு ஏற்படலாகாது ஆரியக் கலப்பு ஏற்பட்டால் இழிவாக இருக்கும் என்கிறார் பெரியார். விடுதலையில் 30.06.1938இல், “தமிழ் பழக்க வழக்கம், சுதந்திரம், மானம் ஆகியவற்றை உணர்த்தும் தமிழ் சொற்கள் எங்கே இருக்கிறது?” தமிழ்நாட்டில் உள்ள பேச்சு வழக்கில் தமிழனுடைய பழக்க வழக்கத்தை கூறுகிறபடி, தமிழனுடைய சுதந்திரம், மானம் ஆகியவற்றை உணர்த்துகிற தமிழ் சொற்கள் எங்கே இருக்கிறது என்று கேட்கிறார். வடமொழிச் சொற்களான, விவாஹம் போன்ற சொற்களை நாம் ஏற்றுக் கொண்டால், சடங்குகள் போன்றவற்றை நாம் ஏற்றுக் கொண்டதாக அர்த்தம். கலியாணம் என்ற வார்த்தையில் அது இல்லை. ஆனால் வடமொழி சொற்களான விவாஹம் என்ற சொல்லை நாம் ஏற்றுக் கொண்டால் புரோகித முறையை நாம் ஏற்றுக் கொண்டவராகிறோம். புரோகித முறையை ஏற்றுக் கொண்டால். ஆண், பெண் பேதம் அங்கே நிலவுகிறது, எனவே தமிழன் அடிமை என்கிற நிலைமை ஏற்படுகிறது ஆகவே மொழியில் கலப்பு இருக்கக் கூடாது என்பது பெரியாரின் கருத்து.

தமிழ்நாட்டில் இந்தி மொழி புகுத்துவதால், தமிழ் மொழி கெட்டுவிடாது. ஆனால், தமிழ் மொழிதான் கெட்டுவிடாதே தவிர தமிழர்கள் கெட்டு விடுவார்கள் என்கிறார் பெரியார். எனவே பெரியார் மொழியை புனிதமாக பார்க்கவில்லை. அந்த மொழி பேசக்கூடிய மக்களின் சுயமரியாதையை, வளர்ச்சியைத் தான் பார்க்கிறார்.

தமிழ் மொழி வளர்ச்சியடைய வேண்டு மானால், தமிழ் மொழியில் இருந்து மதத்தைப் பிரிக்க வேண்டும் என்கிறார். “தமிழ் மொழி ஒரு காலத்தில் உயர்ந்த மொழியாகத்தான் இருந்தது. வடமொழி கலப்பு ஏற்பட்டு தமிழ் மொழியின் நிலை கெட்டு விட்டது. குறிப்பாக தமிழ் மொழி மதச்சார்புடையவர்களிடம் சிக்கி விட்டது. சைவர்களிடத்தில் தமிழ் சிக்கிவிட்டது. சைவர்கள் தங்களது தேவைகளுக்காக வடமொழி சொற்களில் இருந்து பல சொற்களை எடுத்து புகுத்தி விட்டனர்” இங்கே இருக்கும் பல மன்னர்கள் ஆரிய கருத்தை ஏற்றுக் கொண்டனர். அந்த ஆரியக் கருத்துக்களை விளக்க தமிழில் சொற்கள் கிடையாது. அதற்காக வடமொழிகளை தமிழில் புகுத்தி விட்டார்கள். இந்த சைவத்தையும், ஆரியத்தையும் தமிழில் இருந்து பிரித்து விட்டால் பழந்தமிழ் கிடைத்து விடும் என்கிறார் பெரியார்.

பல தமிழறிஞர்களைப் பார்த்திருக்கிறோம், தமிழ் மொழியின் பெருமைகளை மட்டுமே பேசுவர் எழுதுவர். ஆனால் பெரியார் ஏன் இந்த மொழி வளர்ச்சியடையவில்லை என்று சிந்தித்தார். மதத்தில் தமிழ் சிக்கிவிட்டதால் வளர்ச்சியடையவில்லை எனவே மதத்தை விடு என்றார். தமிழில், திருக்குறள், ஆத்திச்சூடிப் போன்ற நீதி நூல்களை புறந்தள்ளி விட்டு, புராணங்களையும், இதிகாசங்களையும் பாடங்களாக வைத்துவிட்டார்கள். தமிழ் மொழி உலக மொழிகளுடன் போட்டி போட வேண்டுமானால் தமிழைப் புனரமைக்க வேண்டும். தமிழைப் புனரமைக்க வேண்டுமானால் மதத்தை மொழியில் இருந்து பிரித்து வைக்க வேண்டும் என்று இவ்வாறு 26.01.1926இல் ‘குடிஅரசில்’ பெரியார் எழுதி யிருக்கிறார்.

“தமிழனின் அறிவிற்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் இந்த தமிழ்ப் பண்டிதர்களும், சைவமும் தான். இந்த தமிழ் பண்டிதர்கள் பார்ப்பானைப் போல் உச்சிக் குடுமி வைத்துக் கொண்டு பட்டை விபூதி பூசிக்கொண்டு கதைக்கு உதவாத போலிக் கதைகளை நம் குழந்தைகளுக்கு போதித்து விட்டார்கள். திருக்குறளை பரப்புவதற்குப் பதில், திருவிளையாடல் புராணங்களையும், தேவார திருவாசகங்களையும், புராண, இதிகாச கதைகளையும் மக்கள் மீது சுமத்தி விட்டார்கள்" என்று குறிப்பிடுகிறார்.

அந்த இலக்கியங்களில் என்ன இருக்கிறது? பெண்ணடிமைத்தனம் இருக்கிறது. சிலப்பதிகாரத்தில் என்ன இருக்கிறது; பெண்ணடிமைத்தனம் மட்டும் தான் இருக்கிறது.

நீதி நூல்களான நாலடியார் போன்றவைகளை இந்து மதம் என்கிற மகா சமுத்திரம் முழுங்கி விட்டது என்றும் மற்றொரு இடத்தில் பெரியார் குறிப்பிட்டுள்ளார். எனவே பெரியார் தொடர்ந்து மொழியில் இருந்து மதத்தைப் பிரிக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டே வருகிறார். ஏனென்றால் மொழியில் புராணக் கருத்துகள் உள்ளன. அவை துளியும் அறிவுக்கு பொருந்தாத செய்திகள். அதுமட்டுமில்லாமல், மனிதர்களுக்குள் ஏற்றத்தாழ்வையும் புகுத்துகிறது. அறிவியல் பூர்வமாக மொழியை மாற்ற வேண்டுமானால் மதத்தை பிரிக்க வேண்டும், எனவே இப்படி அறிவியல் பூர்வமான மொழியாக தமிழ் வரவேண்டும் என்று எந்த தமிழ்ப் பண்டிதராவது உதவ செய்திருக்கிறார்களா என்றால் ஒருவரும்

(4ஆம் பக்கம்)

**தலையங்கம்**

# சுதந்திரத் ‘தீண்டாமை’

ஊராட்சித் தலைவர்களாக ‘தலித்’ பஞ்சாத்துகளில் தேர்வு செய்யப்பட்டவர்களை ஜாதி வெறியர்கள் தேசியக் கொடியை ஏற்ற அனுமதிப்பதில்லை என்ற புகார்கள் தொடர்ந்து வந்து கொண் டிருந்தன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி அமைப்பான தீண்டாமை ஒழிப்பு முன்னணி, இது குறித்து களஆய்வு நடத்தி, அரசிடம் ஒரு அறிக்கை சமர்ப்பித்தது.

‘தலித்’ பஞ்சாயத்துத் தலைவர்கள் மீது திணிக்கப்படும் 40க்கும் மேற்பட்ட தீண்டாமைகள் குறித்து விரிவாக அந்த அறிக்கை பட்டியலிட்டுக் காட்டியது. கடந்த ஆண்டு 20 தலித் பஞ்சாயத்து தலைவர்கள், உள்ளூர் ஜாதி வெறியர்களால் குடியரசு – சுதந்திர நாளில் தேசியக் கொடி ஏற்ற அனுமதிக்கப்படவில்லை. இதைத் தொடர்ந்து தமிழக அரசு தலைமைச் செயலாளர், சுதந்திர நாள் அன்று தலித் பஞ்சாயத்துத் தலைவர்கள் தேசியக் கொடி ஏற்றுவதை உறுதி செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு அரசு சாரபில் கடிதம் எழுதினார். கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் இறையன்பு அவர்களே கும்மிடிப்பூண்டி ஒன்றியம் ஆத்துப்பாக்கம் கிராம பஞ்சாயத்துக்கு கடந்த ஆகஸ்ட் 14ஆம் தேதி கொடி ஏற்றும் விழாவுக்கு நேரில் சென்றார். அவரது கண் முன்னிலையில் தலித் பெண் பஞ்சாயத்துத் தலைவர் அமிர்தம் தேசியக் கொடியை ஏற்றியுள்ளார். 2020ஆம் ஆண்டிலிருந்து அந்த தலித் பஞ்சாயத்துத் தலைவருக்கு கொடி ஏற்றும் உரிமையை உள்ளூர் ஜாதி வெறியர்கள் தடுத்து வந்துள்ளனர்.

கடந்த இரண்டரை ஆண்டு காலமாக பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்கள், பஞ்சாயத்துக் கூட்டங்களைப் புறக்கணித்த தோடு பெண் தலித் தலைவர் செயல்பாடுகளுக்கு ஒத்துழைக்க மறுத்து வந்துள்ளனர். தலைமைச் செயலாளர், பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்துள்ளார். செயலாளர் இல்லாமல் பஞ்சாயத்து இருப்பதை அறிந்து புதிய செயலாளரை நியமிக்க ஒப்புதல் அளித்துள்ளார். பணிகள் தடையின்றி செயல்பட கண்காணிப்பு அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. கடந்தகால அ.இ.அ.தி.மு.க. ஆட்சி இது பற்றி எல்லாம் கண்டு கொள்ளாத ஆட்சியாகவே இருந்தது.

இந்தியாவின் குடியரசுத் தலைவராக ஒரு பழங்குடி சமூகத்தைச் சார்ந்த பெண் எளிதாக வந்துவிட முடியும். ஆனால், உள்ளூர் பஞ்சாயத்தில் ஒரு தலித் பெண் தலைவராக தேர்வு செய்யப்பட்டாலும் செயல்பட முடியாது என்பது தான் இந்திய சுதந்திரத்தின் நிலை.

தமிழ்நாட்டிலே இதற்கான விழிப்புணர்வு இயக்கங்கள் செயல்படுவதால் பிரச்சினை வெளிச்சத்துக்கு வருகிறது. வட மாநிலங்களில் ஜாதியக் கட்டமைப்பு அப்படியே ‘கெட்டி தட்டிப்’ போய் குன்றாக நிற்கிறது. தீண்டாமைக் கொடுமைகள் அம்மாநிலங்களில் ஒவ்வொரு நாளும் தொலைக் காட்சிகளிலும் ஏடுகளிலும் வந்து கொண்டிருக்கின்றன.

தமிழ்நாட்டில் அரசியல் கட்சிக்குள் அதிகாரங்களைக் கைப்பற்று வதிலும், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலும் ‘ஜாதிய அணி திரட்டலே’ நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பார்ப்பனியக் கருத்தியலை இடைநிலை ஜாதிகள் ஓரளவு வளர்ச்சியடைந்த பிறகு அதைத் தங்களது கருத்தியலாக ஏற்றுக் கொண்டு தங்களுக்குக் கீழே ஜாதியப் படி நிலையில் புறந்தள்ளப்பட்ட மக்களை ஒடுக்குவதற்குப் பயன்படுத்து கிறார்கள். பார்ப்பனிய இயங்குதளம் ஜனநாயகத்தை ஜாதி நாயகமாக்கி தனது இருப்பைப் பாதுகாத்துக் கொண்டு வருகிறது. ஜாதியத்தை மதத்தோடு பிணைத்துக் கொண்டிருக்கும் நிலையில் பா.ஜ.க. மாவட்ட ரீதியாக ஜாதிய அணி திரட்டலை திட்டமிட்டு நகர்த்தி வருகிறது.

இதில் பாதிக்கப்படுவது ஒடுக்கப்பட்ட தலித் மக்களும், எண்ணிக்கையில் மிகச் சிறுபான்மையாக அடையாளமிழந்து கிடக்கும் ஜாதிக் குழுக்களும், அனைத்து ஜாதிகளைச் சார்ந்த பெண்களும் தான். ஜாதியத்தை இறுக்கமாக்கும் குடும்ப அமைப்புக்குள் சிக்கி மூச்சுத் திணறும் பெண்கள் சுயமாக முடிவெடுக்க முடியாதவர்களாக ஜாதியத்துக்கு பணிந்து போக வேண்டியவர்களாக கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகிறார்கள். ஆணவப் படுகொலைக்கு உள்ளா கிறார்கள்.

ஜாதியக் கட்டமைப்புகளின் இறுக்கத்தை பலவீனப்படுத்துவது அவ்வளவு எளிதானது அல்ல. ஒவ்வொரு ஜாதிக் குழுவிலிருந்தும் சொந்த ஜாதிக் கட்டமைப்புக்கு எதிரான குரல்கள் வலுவாக எழும்போதுதான் அது சாத்தியப்படும். இதில் பெண்களுக்கு முக்கிய வரலாற்றுப் பாத்திரம் இருக்கிறது. அடிமைத்தனத்தை ஏற்க மறுக்கும் படித்த பெண்கள், ஜாதி எதிர்ப்புக் களத்தின் முன்னணிப் படையாக உருவெடுக்கும் சமூக அரசியல் சூழலை சமூக இயக்கங்கள் உருவாக்கி அதில் புறந்தள்ளப்பட்ட ஜாதிக் குழுக்கள் மதச் சார்பற்ற முற்போக்கு சக்திகளை இணைத்து ஜாதி எதிர்ப்புக் களம் ஒன்றை கட்டமைக்க வேண்டும்; கருத்தியலை வழங்கும் பார்ப்பனர்களின் ‘வர்ணாஸ்ரம’ நிறுவனங்களை அம்பலப்படுத்துவதோடு, சுயஜாதி எதிர்ப்பையும் முன்னெடுக்க வேண்டியது காலத்தின் தேவை!

# ‘தினமலர்’ பூணூல் மலர் தான்!

தினமலர் நாளேட்டை பொதுவாக ‘பூணூல்’ மலர் என்று பலரும் குறிப்பிடுவது வழக்கம். இது ஏதோ அந்த ஏட்டை அவமதிப்பது என்பது பொருள் ஆகாது; உண்மையிலேயே நாங்கள் பூணூல் மலர்தான் என்பதை அந்த ஏடும் ஒப்புக் கொண்டு இருக்கிறது.

கடந்த ஆகஸ்ட் 11 ஆம் தேதி ஆவணி அவிட்டம் என்கிற பூணூல் மாற்றும் சடங்கு நடக்கின்ற நாள். அந்த நாளில் கட்டுரை ஒன்றை தினமலர் நாளேடு வெளியிட்டிருக்கிறது, அதில் பூணூல் மாற்றுகின்ற சடங்கை பிராமணனாக இரு பிறப்பு எடுக்கின்ற சடங்கை நமது பிராமண சந்ததிகளிடம் கொண்டு போய் சேர்ப்பது பிராமணர்கள் ஆகிய நமது கடமை என்று வலியுறுத்தி கட்டுரை ஒன்றை எழுதி இருக்கிறது.

“இந்த நாளை காஞ்சி சங்கராச்சாரி கல்வித் திருநாள் என்கிறார். படைப்புக் கடவுளான பிரம்மாவிற்கு வேதம் கிடைத்த நன்னாள் தான் ஆவணி அவிட்டம். அந்த நாளில் தான் நாம் வேதத்தின்படி பூணூலை மாற்றிக் கொண்டு இருக்கிறோம். மாற்றுவதோடு காயத்ரி மந்திரத்தையும் நாம் ஜெபிக்கிறோம். காயத்ரி மந்திரத்தை ஜெபிப்போரின் மனதும் உடலும் தூய்மை பெறுகிறது. அதனால் ஏற்படும் ஆன்மீக அதிர்வலைகளால் உலகமே நன்மை பெறுகிறது.

உயிர்களெல்லாம் நலமுடன் வாழ்வதற்கு வழி ஏற்படுகிறது. வேதம் நமக்கு அளித்த அதாவது பிராமணர்களுக்கு அளித்த பெரும் செல்வமான காயத்ரி ஜெபத்தை நாம் நம் இளைய தலைமுறையிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும் அது நமது கடமை” என்று அந்த ஏடு சிலாகித்து எழுதி இருக்கிறது.

பூணூல் அணிகின்ற உரிமை நமக்கே உண்டு; அது பிறப்பின் சிறப்பு என்பதோடு, காயத்திரி மந்திரம் ஓதுவதால் கிடைக்கக் கூடிய மனதும் உடலும் தூய்மையடைகின்ற சக்தி ‘பிராமணர்களுக்கு’ மட்டுமே கிடைக்க வேண்டும் என்று எழுதும் ஏட்டை “பூணூல் மலர்” என்று தானே சொல்ல வேண்டும்?

## சபரிமலை பிரசாதம் பிராமணர்கள் மட்டுமே தயாரிக்கத் தடை

சபரிமலை ஐயப்பன் கோவில் நிர்வாகம் பெரும்பவூர் தேவசம் போர்டு கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறது. இது அண்மையில் ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருந்தது. அது பிரசாதம் தயாரிப்பதற்கான டெண்டர் விளம்பரம். இதில் ஒரு நிபந்தனை சேர்க்கப்பட்டிருந்தது, “கேரள மாநிலத்தை சேர்ந்த பிராமணர்கள் மட்டுமே இந்த டெண்டரில் விண்ணப்பிக்க முடியும் பிராமணர்கள் மட்டுமே பிரசாதத்தை தயாரிக்க முடியும்” என்று அதில் கூறப்பட்டு இருந்தது.

இதை எதிர்த்து அம்பேத்கர் கலாச்சார மய்யத்தினுடைய தலைவர் சிவன் கத்தாரி வழக்கு ஒன்றை தொடர்ந்தார். வழக்கு வந்தவுடன் சபரிமலை நிர்வாகம் தன்னுடைய உத்தரவை திரும்பப் பெறுவதாக இப்போது அறிவித்திருக்கிறது. ஏற்கனவே 2001 ஆம் ஆண்டு இதே தேவசம் போர்டு இப்படி மதத்தில் ஜாதியை புகுத்துகின்ற முறையை ஒழித்து விட வேண்டும் என்று அறிவுரை கூறி இருந்தாலும் கூட அதற்கு தடை போட்டு இருந்தாலும் கூட அதையும் மீறி கடந்த பல ஆண்டுகளாக பார்ப்பனர்களுக்கு மட்டுமே இந்த உரிமை வழங்கப்பட்டு வந்தது.

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் இதுதான் நடந்துகொண்டு இருக்கிறது. வைணவக் குழுவை சேர்ந்த அய்யங்கார்கள் மட்டும்தான் அங்கே பிரசாதத்தை தயாரிக்க முடியும். சனாதன தர்மம், சனாதன தர்மம் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்களே, சனாதன தர்மம் என்று சொன்னால் மாறாதது என்று பொருள்.

ஆக சனாதன தர்மத்தின்படி கோவிலில் பிரசாதம் தயாரிக்கின்ற உரிமை பிராமணர்களுக்கு மட்டுமே உண்டு.

## சுயமரியாதை



‘சுதந்திரம்’, ‘சுயராஜ்யம்’, ‘உரிமை’ என்கின்ற வார்த்தைகள் தேச ஜனங்களுக்குப் பெரிய இழிவுக்கும், கொடுமைக்கும் ஆதாரமானவை தான். ஆதலால், நமது தேசம் உண்மையான உரிமை அடையப் பாடுபட வேண்டுமானால், மக்களின் சுயமரியாதைக்காகத்தான் முதலில் பாடுபட வேண்டும்.

**குடி அரசு – 24.01.1926**

இந்த உலகத்திலுள்ள எல்லா அகராதிகளையும் கொண்டு வந்து போட்டு, ஏடு ஏடாய்ப் புரட்டிப் பார்த்தாலும் அழகும் பொருளும் சக்தியும் நிறைந்த வார்த்தையாகிய ’சுய மரியாதை’ என்கிற வார்த்தைக்கு மேலானதாகவோ, ஈடானதாகவோ உள்ள வேறு ஒரு வார்த்தையை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. இந்த வார்த்தையானது, நமது நண்பர்களிலேயே சிலர், ’கொள்கைகளெல்லாம் நமக்குப் பிடிக்கின்றன. ஆனால், சுயமரியாதை என்ற சொல் மாத்திரம் பிடிக்கவில்லை’ என்று சொல்லும் மேதாவிகளுக்குத் தக்க பதிலாகும்.

**குடி அரசு – 01.06.1930**

# மேட்டூர் - சேலம் - சென்னை - கோவை - திருப்பூரில் கழகத்தின் 10ஆம் ஆண்டு நிறைவு விழா தெருமுனைக் கூட்டங்கள்

சேலம் மேற்கு மாவட்ட திவிகவின் சார்பில் கழகத்தின் 11ம் ஆண்டு துவக்க நாளில் தெருமுனைக் கூட்டங்கள் 12.08.2022 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொளத்தூர் பேருந்து நிலையத்தில் பறை முழக்கம்,மேட்டூர் டி.கே.ஆர் இசைக்குழுவின் கொள்கைப் பாடல்களுடன் துவங்கியது.

முதலாவதாக வழக்கறிஞர் கண்ணகி “பெரியாரின் தேவை, பெண்ணுரிமை” ஆகியவை குறித்து உரை நிகழ்த்தினார். அடுத்து கழகத்தின் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், “திராவிடர் விடுதலைக் கழகம் கடந்து வந்த பாதைகளையும், தமிழக உரிமைகளுக்காக கழகம் செய்த போராட்டங்கள், பரப்புரைகள் மற்றும் ஒன்றிய பிஜேபி அரசினால் நாம் எவ்வாறெல்லாம் வஞ்சிக்கப்படுகிறோம்” என்பதை பொதுமக்களுக்கு விளக்கிக் கூறினார்.

கொளத்தூர் பேருந்து நிலையத்தில் திரளான பொதுமக்கள் உரையை கேட்டனர். பொது மக்களுக்கு திராவிடர் விடுதலைக்கத்தின் கடந்த 10 ஆண்டு கால பரப்புரை, போராட்டங்கள், பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றை விளக்கி துண்டறிக்கை வழங்கப்பட்டது.

நிறைவாக கொளத்தூர் நகர செயலாளர் அறிவுச்செல்வன் நன்றியுரை கூற தெருமுனைக் கூட்டம் 11 மணியளவில் கொளத்தூரில் நிறைவடைந்தது. அனைவருக்கும் கொளத்தூர் நகர கழகம் தேநீர் ஏற்பாடு செய்திருந்தனர்.

2ஆவது தெருமுனைக் கூட்டமாக மேட்டூர் ஆர்.எஸ். பகுதியில் காலை 11.30 மணிக்கு பறை இசை மற்றும் கொள்கைப் பாடல்களோடு தொடங்கியது.

முதலில் அறிவுமதி, பெரியார் தனது 94 வயதிலும் மூத்திர சட்டியை தூக்கிக் கொண்டு இந்த மக்களுக்காக பாடுபட்டு பெற்றுக் கொடுத்த கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவை குறித்தும் பெண் விடுதலைக்காக தந்தை பெரியார் ஆற்றிய பணி களையும் நினைவு கூர்ந்தார். அடுத்து கழகப் பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன் சிறப்புரை நிகழ்த்தினார்.

நிறைவாக மாணவரணி நாகராஜ் நன்றி கூற தெருமுனைக் கூட்டம் ஆர்.எஸ். பகுதியில் நிறைவடைந்தது. ஆர்.எஸ். படிப்பகத்தில் தோழர்களுக்கு மாட்டுக்கறி பிரியாணி வழங்கப்பட்டது.

3ஆவது நிகழ்வாக மேச்சேரி பேருந்து நிலையத்தில் மாலை 3.00 மணிக்கு பறை இசை, பாடல்களுடன் தெருமுனைக் கூட்டம் தொடங்கியது. சுதா தமது உரையில் “திராவிடர் விடுதலைக் கழக 10 ஆண்டு கால பணிகளையும், ஒன்றிய பிஜேபி அரசின் அவலங்களையும்” பொதுமக்களிடையே எடுத்து கூறினார். அடுத்து பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன் சிறப்புரை யாற்றினார். மாலை 4 மணிக்கு தெருமுனைக் கூட்டம் நிறைவடைந்தது.

4 ஆவது தெருமுனைக் கூட்டமாக மாலை 4.30 மணிக்கு நங்கவள்ளி பேருந்து நிலையத்தில் பறை இசை, பாடல்களுடன் தொடங்கியது.

முதலாவதாக ஆனந்தி “திராவிடர் விடுதலைக் கழகத்தின் பணிகள் குறித்தும்,பெரியார் கொள்கையின் தேவைகள் குறித்தும்” பேசினார். அடுத்ததாக நங்கவள்ளி அன்பு “ஒன்றிய பி.ஜே.பி. அரசின் அவலங்களை குறித்து” பேசினார். நிறைவாக பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரன் நிறைவுரை நிகழ்த்தினார் ஐஸ்வர்யா நன்றியுரையுடன் தெருமுனைக் கூட்டம் நிறைவடைந்தது. கலந்து கொண்ட தோழர்கள் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.

5ஆவது நிகழ்வாக மேட்டூர் சின்ன பார்க் திடலில் மாலை 6 மணிக்கு தெருமுனைக் கூட்டம் பறை இசை மற்றும் பாடல்களுடன் தொடங்கியது. முதலாவதாக தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல் உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் “திராவிடர் விடுதலைக் கழகம் கடந்து வந்த பாதைகள்” பற்றி கூறினார். அடுத்து தேன்மொழி தனது உரையில் “1953இல் அன்றைய முதல்வர் இராஜாஜி கொண்டு வந்த குலக்கல்வி திட்டத்தைப் போல தற்போதுள்ள ஒன்றிய பி.ஜே.பி. அரசு புதிய கல்விக் கொள்கையை கொண்டு வந்துள்ளது என்றும் அதனை எதிர்க்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம்” என்றும் கூறினார்.

நிறைவாக பால்.பிரபாகரன் “திராவிடர் விடுதலைக்கழகம் கடந்து வந்த பாதைகள் பற்றியும், இந்து அறநிலையத் துறையில் பெண்களையும் பணியில் அமர்த்த திராவிடர் விடுதலைக்கழகம் எடுத்த முயற்சிகளையும் அதில் வெற்றி கண்டு தற்போது அறநிலையத் துறையில் பெண்கள் பணியில் இருப்பதற்கு திராவிடர் விடுதலைக் கழகம் தான் காரணம்” என்பதை குறிப்பிட்டு பேசினார்.

இரவு 8.30 மணியளவில் மேட்டூர் நகர பொருளாளர் முத்துக்குமார் நன்றியுரை கூற தெருமுனைக் கூட்டம் நிறைவடைந்தது.

சேலம் மாவட்டம் முழுவதும் திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைய வேண்டும் ஏன்? என்பதை விளக்கி 3000 துண்டறிக்கைகள் பொது மக்களிடம் விநியோகிக்கப்பட்டது. மேட்டூர், நங்கவள்ளி ஆகிய பகுதிகள் முழுவதும் 200 சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது. நடைபெற்ற 5 தெருமுனைக் கூட்டங்களுக்கான ஏற்பாடுகளை சேலம் மாவட்ட பொறுப்பாளர்களும்,தோழர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

**சென்னை :** திராவிடர் விடுதலைக் கழகத்தின் 11 ஆம் ஆண்டு தொடக்க நிகழ்வு காலை 9 மணியளவில், வி.எம்.தெரு பெரியார் படிப்பகத்தில் உள்ள பெரியார் சிலைக்கு, இரண்யா, இரம்யா, ஆதித்யா ஆகியோர் மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து, பெரியார் சிந்தனைப் பலகைகள், வி.எம் தெரு, சைவ முத்தையா தெரு, பாலாஜி நகர், அஜந்தா பேருந்து நிறுத்தம்,இராதாகிருஷ்ணன் சாலை உள்ளிட்ட 5 இடங்களில் திறக்கப்பட்டன.

மயிலாப்பூர் லஸ் கார்னர், விசாலாட்சி தோட்டம், மந்தைவெளி இரயில் நிலையம் ஆகிய இடங்களில் கழக கொடிகள் ஏற்றப்பட்டன. பொதுமக்களுக்கு இனிப்புகளை தோழர்கள் வழங்கினர்.

இறுதியாக, கழகத் தலைமை அலுவலகத்தில், தோழர்களின் ஒன்று கூடல் நிகழ்வு தொடங்கி நடைபெற்றது. கழகத்தின் பத்து ஆண்டுகால பயணம், தொடர்ந்து கழகத்தின் வேலைத் திட்டங்கள், பெரியார் கொள்கைகளை மக்களிடத்தில் எடுத்து செல்வது குறித்து விரிவாக கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார். தொடர்ந்து, தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், நாத்திகன், சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி ஆகியோர் கருத்துகளை தெரிவித்தனர். நிகழ்வை மாவட்ட செயலாளர் உமாபதி ஒருங்கிணைத்தார்.

> 2012 ஆகஸ்டு 12இல் தொடங்கப்பட்டது திராவிடர் விடுதலைக் கழகம். 10 ஆண்டுகளில் கழகம் நடத்திய போராட்டங்கள் பெற்றுத் தந்த வெற்றிகளை மக்களிடம் தெருமுனைக் கூட்டங்களை நடத்தி கழகத் தோழர்கள் விளக்கினர்.

**கோவை :** திராவிடர் விடுதலைக் கழகம் 11-ஆம் ஆண்டு தொடக்கவிழாவை முன்னிட்டு கோவை மாவட்ட கழகத்தின் சார்பில் காந்திபுரம் பெரியார் சிலைக்கு மாவட்ட அமைப்பாளர் கிருட்டிணன் தலைமையில் மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பி மரியாதை செலுத்தப்பட்டது. நேருதாஸ் உறுதிமொழி வாசித்தார். மாவட்ட செயலாளர் யாழ் வெள்ளிங்கிரி சிறப்புரையாற்றினார்.

பின்னர் சௌரிபாளையம் பகுதி கழகத்தின் சார்பாக சௌரிபாளையம் பேருந்து நிறுத்தம் அருகில் கழக கொடியேற்று விழா சிவராசு தலைமையில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் பா.இராமசந்திரன் கொடியேற்றினார், விஷ்ணு உறுதிமொழி வாசித்தார். இதில் மணிகண்டன் திமுக, நந்தகோபால் காங்கிரஸ் ஆகிய தோழமை கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

பங்கேற்ற தோழர்கள் : சூலூர் பன்னீர்செல்வம், நிர்மல் குமார், வெங்கட், புரட்சி தமிழன் ஆனந்த், சக்கரவர்த்தி, மணி, சபரிகிரி, மகிழ்வன், ராஜீ, நடராஜ், அரிதாசு, சதிசுகுமார், ஜின்னா, அமிலா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

**திருப்பூரில்** : திராவிடர் விடுதலை கழகத்தின் 11 ஆவது ஆண்டு துவக்க நாள் நிகழ்வுகள் கொடியேற்றம் மற்றும் கல்வி வள்ளல் காமராசர் பிறந்த நாள் பரப்புரை பயணமாக திருப்பூர் மாவட்ட திவிக சார்பில் 12.08.2022 வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முதல் நிகழ்வாக வீரபாண்டி பிரிவில் உள்ள பெரியார் படிப்பகம் அருகில் மாலை 03.00 மணியளவில் கழகத்தின் கொடி கழக தெற்குப் பகுதி அமைப்பாளர் தோழர் இராமசாமி தலைமையில் ஏற்றப்பட்டு பரப்புரை பயணம் துவங்கியது.

முதல் பரப்புரை மாலை 04.00 மணியளவில் செங்கப்பள்ளியில் நடைபெற்றது.திருப்பூர் மாநகர அமைப்பாளர் முத்து தலைமையில் பறை இசையுடன் நிகழ்வு தொடங்கியது.

பரப்புரையில் கழக இணையதள பொறுப்பாளர் பரிமளராசன்,தோழர் திலகவதி,தலைமைக் குழு உறுப்பினர் பன்னீர் செல்வம்,மாணவர் கழக பொறுப்பாளர் மகிழவன் ஆகியோர் உரையாற்றினர்.

கழகப் பொருளாளர் திருப்பூர் சு.துரைசாமி நிறைவுரையாற்றினார். முடிவில் தோழர் சரஸ்வதி நன்றியுரையாற்றினார்.

இரண்டாவதாக குன்னத்தூரில் மாலை 05.00 மணியளவில் குன்னத்தூர் பேருந்து நிலையம் முன்பு மாநகரச் செயலாளர் மாதவன் தலைமையில் பறையிசையுடன் தொடங்கி பரப்புரை நடைபெற்றது. மாணவர் கழக பொறுப்பாளர் மகிழவன் “மாநில உரிமைகளில் கல்வி வேலை வாய்ப்புகளில ஒன்றிய பாஜக அரசால் மறுக்கப்பட்ட செய்திகளை” விரிவாக எடுத்துரைத்தார்.

அடுத்து பேசிய இணைய தள பொறுப்பாளர் பரிமளராசன் “தமிழ்நாடு மற்ற மாநிலங்களை விட திராவிடர் இயக்கத்தால் எப்படியெல்லாம் எந்த எந்த காலங்களில் வளர்ச்சியடைந்தது” என்பதை எடுத்துரைத்தார்.

கழகப் பொருளாளர் துரைசாமி”தமிழகத்தில் ஒன்றிய அரசின் மூலமாக எப்படியெல்லாம் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள்” என்பதை எடுத்துரைத்தார். அய்யப்பன் நன்றியுரையுடன் குன்னத்தூரில பரப்புரை நிறைவடைந்தது. பேருந்து நிலையத்தில் நின்றிருந்த பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள் ஏராளமானோர் முன்பு இப்பரப்புரை நடைபெற்றது.

இறுதியாக மாலை 07.00 மணிக்கு பெருமாநல்லூரில் நால் ரோடு சந்திப்பு பேருந்து நிறுத்தம் அருகில் மாநகரத் தலைவர் தனபால் தலைமையில் பறையிசையுடன் பரப்புரை தொடங்கியது. வசந்தி துவக்க உரையாற்றினார்கள்.

அடுத்து உரையாற்றிய மாணவர் கழக பொறுப்பாளர் மகிழவன் “ராஜாஜியின் குலக்கல்வி திட்டம் பற்றியும் பெரியார் அதனை எதிர்த்து அத்திட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவர விடாமல் தடுத்ததையும்,கல்வி வள்ளல் காமராசரின் கல்விப் பணி, தந்தை பெரியாரின் தொலைநோக்குப் பார்வை” ஆகியவை குறித்து விரிவாகப் பேசினார்.

அடுத்து உரையாற்றிய இணையதள பொறுப்பாளர் பரிமளராசன் அவர்கள் “யார் இந்துக்கள், யார் இந்துவவாதிகள், மக்களின் மத நம்பிக்கையை பயன்படுத்தி அவர்களை தவறாக திசை திருப்பி விட்டு அதே மக்களின் உரிமைகளை எப்படி பறிக்கிறார்கள் என்பதையும், சனாதனவாதிகள் சாதி, மத பிளவுகளை உண்டாக்கி அதை வைத்து எப்படி ஏமாற்றுகின்றார்கள் என்பதையும் மறுக்கப்படும் தமிழ்நாட்டின் உரிமைகள் பற்றியும் திராவிடர் இயக்கத்தின் சாதனைகள்” பற்றியும் விரிவான உரையாற்றினார்.

கழகப் பொருளாளர் துரைசாமி விவசாயிகள் நிறைந்துள்ள பரப்புரை பகுதியில் “ஒன்றிய பாஜக அரசு கொண்டுவரத் திட்டமிடும் புதிய வேளாண்மை சட்டத்தினால் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும்,சனாதனவாதிகள் மனுசாஸ்திரப்படி மக்களை எப்படியெல்லாம் பிரித்து இழிவுபடுத்தப் படுகிறார்கள்” என்பதை விளக்கி உரையாற்றினார்கள்.

இறுதியாக அந்த பகுதியை சேர்ந்த திமுகவின் முன்னாள் மாவட்டப் பிரதிநிதி அண்ணாதுரை, திருப்பூர் மாவட்ட மதிமுக தொழிற்சங்க செயலாளர் குமார்கழகத்தின் பரப்புரையை பார்த்து பாராட்டி பரப்புரையில் ஈடுபட்ட தோழர்கள் அனைவருக்கும் இரவு உணவு வழங்கி சிறப்பு செய்தனர்.

பரப்புரை நடைபெற்ற இடங்களில் கூடியிருந்த பொதுமக்கள் கடைகள் ஆகியவற்றில் துண்டறிக்கை வழங்கப்பட்டு நிதி உதவி பெறப்பட்டது. மூன்று இடங்கள் சேர்த்து மொத்தம் 2610 ரூபாய்களை பொதுமக்கள் நன்கொடையாக அளித்தனர். தோழர்கள் முத்து லட்சுமி, ஸ்ரீசா, மாரிமுத்து, வசந்தி, ரஞ்சனி, சரஸ்வதி ஆகியோர் துண்டறிக்கை வழங்கி பொது மக்களிடம் வசூல் செய்தனர்.

கழகத்தின் திருப்பூர் தெற்குப் பகுதி அமைப்பாளர் தோழர் இராமசாமி அவர்கள் 1000 ரூபாய், குன்னத்தூரில் கழக ஆதரவாளர்கள் சிவா அவர்கள் 500 ரூபாய் நன்கொடையும்,தோழர் சீனிவாசன் அவர்கள் பரப்புரை குழுவினர் அனைவருக்கும் தேனீர் வழங்கியும் சிறப்புச் செய்தார்.

பரப்புரையில் கலந்து கொண்ட தோழர்கள். : கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம், இணையதள பொறுப்பாளர் பரிமளராசன், மாநகரச் செயலாளர் மாதவன், மாநகரத் தலைவர் தனபால், மாநகர அமைப்பாளர் முத்து, மாணவர் கழக பொறுப்பாளர் மகிழவன், அய்யப்பன், சரஸ்வதி, முத்து லட்சுமி, வசந்தி, திலகவதி, ஸ்ரீசா, மாரிமுத்து, கவுசல்யா, ரஞ்சனி, மதன், சிறுவர்கள் வெற்றி, ரித்திஷ்சாய் மற்றும் பறை இசைக் கலைஞர்கள். ●

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# குரூப்-1 தேர்வில் பெண்கள் தேர்வு 86.3 சதவீதம்

முன்னாள் மத்திய அமைச்சராக இருந்தவர் சந்திரசேகர். மக்கள் தொகையில் அவர் நிபுணத்துவம் பெற்ற அறிஞர். அவர் ஒருமுறை பெரியாரை நேரில் பேட்டி கண்டார். அப்போது பெரியார் அனைத்து வேலைவாய்ப்புகளும் பெண்களுக்கு 50 சதவீத இடங்களை ஒதுக்கீடு செய்துவிட வேண்டுமென்று கூறினார். சந்திரசேகர் ஒரு கேள்வியை திருப்பி கேட்டார், அப்படியானால் ஆண்கள் அதை எதிர்க்க மாட்டார்களா ? இதற்கு பெரியார் தந்த பதில், “எப்படி எதிர்ப்பார்கள்? அவர்கள் வீட்டு மனைவிகளுக்கும் அவர்கள் வீட்டு சகோதரிகளுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கின்ற போது ஆண்கள் எப்படி எதிர்ப்பார்கள்” என்று பெரியார் கேட்டார். இது ஒரு ஒரிஜினலான சிந்தனை என்று சந்திரசேகர் பெரியாரைப் பாராட்டினார். இது ஒரு நிகழ்வு.

1989ஆம் ஆண்டு கலைஞர் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு வேலைவாய்ப்புகளில் 30% பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார். பெரியார் 50% கேட்டார் கலைஞர் 30% பெண்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி சட்டத்தை கொண்டு வந்தார். இப்போது தமிழ்நாடு தேர்வாணையம் குரூப்-1 பதவிகளுக்கான தேர்வை நடத்தி முடித்துள்ளது. இந்த தேர்வில் பங்கேற்றவர்கள் 2.5 லட்சம் பேர் இதில் 3800 பேர் தேர்ச்சி பெற்றார்கள். தேர்ச்சி பெற்றவர்கள் மீண்டும் முதன்மைத் தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். அந்த முதன்மைத் தேர்விலும் தேர்ச்சி பெற்றவர்கள் 137 பேர் அந்த 137 பேருக்கும் ஆணையம் நேர்முகத் தேர்வை நடத்தியது. மொத்தம் உள்ள துணை கலெக்டர்கள் டிஎஸ்பிக்கள் உள்ளிட்ட 66 பதவிகளுக்கு தேர்ச்சி முடிவுகள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன.

இதில் குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்று சொன்னால், 66 பதவிகளில் 57 பேர் பெண்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதாவது 86.3% பேர் பெண்கள். பெரியார் சொன்ன 50 சதவீதத்தையும் தாண்டி பெண்கள் இன்றைக்கு வெற்றிக் கொடியை பறக்க விட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

இரண்டு குழந்தைகளுக்கு தாயான கலைவாணி என்பவர் இதில் தேர்ச்சி பெற்றவர். அரசுப் பள்ளியில் தமிழ் வழியில் பயின்றவர். புதுக்கோட்டை மாவட்டம் செட்டிப்பட்டி கிராமத்தை சேர்ந்த பவானி என்பவர் அரசு பள்ளியில் அரசு கல்லூரியில் அதுவும் தமிழ் வழியில் படித்து எந்தவிதமான பயிற்சி வகுப்புகளுக்கும் செல்லாமல் முதல் முறையாக தேர்வு எழுதி டிஎஸ்பி ஆக அவர் தேர்ச்சி பெற்றிருக்கிறார். பெற்றோர்கள் விவசாய கூலிகள், டீக்கடை ஒன்றை நடத்தி கொண்டு இருக்கிறார்கள். பெண்களுக்கான மிகப்பெரிய சமூகப் புரட்சி ஒன்று தமிழ்நாட்டில் நடந்து கொண்டு இருக்கிறது. இது தொடர வேண்டும் வெற்றி பெற்ற பெண்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்போம்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அப்படி செய்யவில்லை என்கிறார். பல பண்டிதர்கள் மதப் பிரசங்கள் செய்வதற்காகவே தமிழை கற்றுள்ளனர். மதத்தை, பார்ப்பனக் கருத்துக்களை பரப்புவதற்குத்தான் தமிழைப் பயன்படுத்தினார்களே தவிர தமிழ் மொழி வளருவதற்காக எந்த பண்டிதரும் எதுவும் செய்யவில்லை. இன்னும் கடுமையாக, “தமிழ்ப் பண்டிதர்கள் தங்களது புத்தியை மதத்திற்கு பறிகொடுத்துவிட்டார்கள்” என்று கடிந்தும் பெரியார் கூறுகிறார். மதத்தை மட்டும் பிரித்தால் போதாது பிற மொழி சொற்களையும் பிரிக்க வேண்டும். வட மொழி சொற்களை ஏன் பிரிக்க வேண்டும் என்பதற்கு ஒன்றை கூறுகிறார், ஜாதி என்ற ஒரு சொல் இருக்கிறது. இது தமிழ் சொல்லா என்றால் கிடையாது. ஜாதி என்ற சொல்லுக்கும் தமிழுக்கும் சம்மந்தமில்லை. அப்படியானால் ஜாதிக்கும், தமிழனுக்கும் சம்மந்தமில்லை என்கிறார். எனவே வடமொழியை தமிழ் மொழியில் ஏற்றுக் கொண்டதனால் இழிவும் சேர்ந்து கொண்டது. தெவசம், திதி, கல்யாணம், வைகுந்தம், சொர்க்கம், மோட்சம், நரகம் இதில் எதாவது தமிழ் வார்த்தைகளா ? அல்லது இந்த வடமொழி வார்த்தைகளுக்கு இணையான எதவது தமிழ் வார்த்தைகள் உண்டா என்றால் இதுவரை இல்லை. இந்த சொற்களெல்லாம் நம்மை அடிமைப் படுத்துகிற சொற்களாக இருக்கிறது, என்கிறார்.

கன்னிகாதானம் என்பது தமிழ் வார்த்தை அல்ல. தமிழில், “வாழ்க்கைத் துணை நலம்” என்ற வார்த்தையைத் தான் பயன்படுத்துகிறார்கள். மோட்சம் என்பது தமிழ் வார்த்தையும் கிடையாது, மோட்சம் தமிழனுக்கு சொந்தமும் கிடையாது. ஆனால் இந்த மோட்சத்திற்காக, தமிழர்கள் பொருளை செலவழிக்கின்றனர். எனவே இந்த மூட நம்பிக்கையிலிருந்து விடுபட வேண்டும் என்றால் வடமொழியை நீக்க வேண்டும் என்கிறார். பதிவிரதா இருந்தால் சதிவிரதா இருக்க வேண்டும். அப்படியும் இல்லை. இப்படி பல உதாரணங்களை பெரியார் அடுக்கிக் கொண்டே போகிறார். இந்த வடமொழியால் தான் நம்மை சூத்திரன் என்றும் கூறுகிறான். இந்த சூத்திரன் என்ற வார்த்தைக்கு தமிழ் நீதி நூல்களில் ஏதேனும் ஒரு ஆதாரம் காட்ட முடியுமா ? ஆனால் வடமொழிகளில் ஆயிரம் ஆயிரம் ஆதாரங்களை காட்ட முடியும். இந்த சூத்திரன் என்ற வார்த்தைகள்கு கடவுள்களே சாட்சியாக இருக்கிறார்கள். ஆனால் தமிழ் மொழியில் இல்லை என்று பெரியார் எடுத்துக் காட்டுகிறார்.

# திமிர் பேச்சு கண்ணனை கைது செய்: கழகம் ஆர்ப்பாட்டம்




திருவரங்கத்தில் உள்ள பெரியாரின் சிலையை அகற்ற வேண்டும் என பேசிய ஸ்டண்ட் மாஸ்டர் கனல் கண்ணனை கைது செய்யக் கோரி 10.08.2022 அன்று காலை 10.30 மணி அளவில் ஈரோடு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக ஈரோடு சூரம்பட்டி நால் ரோட்டில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கழக அமைப்புச் செயலாளர் ப.இரத்தினசாமி தலைமை தாங்கினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு தோழமை அமைப்புகள் பங்குபெற்றன.

கண்டன உரையாற்றியவர்கள்: 1. நாத்திகஜோதி - ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர். 2. சித்திக் - த.மு.மு.க; 3. சிந்தனைச் செல்வன் - தமிழ்ப் புலிகள் கட்சி; 4. வீரகோவிந்தன் - ஆதித் தமிழர் பேரவை; 5. சலீம் - மனிதநேய மக்கள் கட்சி; 6. வேங்கை பொன்னுசாமி - தமிழ்ப் புலிகள் கட்சி; 7. நிலவன் - நீரோடை; 8. கண.குறிஞ்சி - PUCL; 9. திருப்பூர் துரைசாமி - பொருளாளர் தி.வி.க.; 10. இராம.இளங்கோவன் - வெளியீட்டுச் செயலாளர், தி.வி.க.

இந்தியப் பிரியன் நன்றி கூறினார். ஆர்ப்பாடத்தில் கலந்துகொண்ட தி.வி.க. தோழர்கள் திருப்பூர் அய்யப்பன், முத்துப் பாண்டி, பிரகாஷ் பள்ளிபாளையம். வேணுகோபால், வேல்முருகன், கிருஷ்ணமூர்த்தி,வெங்கடேஷ், செல்வராசு, எழிலன், கிருஷ்ணமூர்த்தி, கிருஷ்ணன், பிரபு, குமார், திருமுருகன், சத்தியமூர்த்தி, கணேஷ், விஜயரத்தினம், கதிர், பழனிசாமி, விக்னேஷ் மற்றும் தோழர்கள். பிரியாணிபாளையம் பாபு அனைவருக்கும் சிற்றுண்டி,தேநீர் வழங்கினார்.

குறிப்பு: கடைசியாக வந்த செய்தியில் புதுச்சேரியில் பதுங்கியிருந்த கண்ணனை காவல்துறை கைது செய்துள்ளது.

# தேசியக் கொடியிலும் தீண்டாமையா? தமிழக அரசு கண்டிப்பு

தமிழ்நாட்டு கிராமங்களில் இன்னும் சாதிய ஆதிக்கவாதிகளின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றன. சட்டங்கள் அங்கு நுழைவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. தமிழகத்தில் தலித் ஊராட்சிகளில் இன்னமும் சாதிய பாகுபாடுகள் காணப்பட்டு கொண்டே இருக்கின்றன, தீண்டாமை ஒழிப்பு முன்னணி ஒரு நல்ல வேலையை செய்து இருக்கிறது. 386 ஊராட்சிகளில் 26 கேள்விகளுடன் 400 பயிற்சி பெற்ற ஊழியர்களை வைத்து ஆய்வு ஒன்றை மேற்கொண்டது, இதில் பல அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளிவந்தன.

20 க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் தலித் ஊராட்சி தலைவர்கள் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு கடந்த ஆண்டு அனுமதிக்கப்படவில்லை என்று கண்டறிந்தது. அதுமட்டுமின்றி, ஊராட்சித் தலைவர்களுக்கு 42 வகையான தீண்டாமைகள் எப்படி திணிக்கப்படுகிறது, என்பதும் கண்டறிந்து அரசிடம் அறிக்கை ஒன்றை தந்தது.

உடனடியாக தமிழக அரசினுடைய தலைமைச் செயலாளர் தலித் பஞ்சாயத்து தலைவர்கள் தேசிய கொடியை ஏற்றுவதை உறுதி செய்ய வேண்டும், என்று வலியுறுத்தி அதற்கான நடவடிக்கைகளில் இறங்கி இருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்க ஒன்றாகும்.

இந்த சாதி பிரச்சினைகளுக்கு கட்சி வண்ணம் பூச முடியாது அனைத்துக் கட்சிகளிலும் சாதி ஆதிக்க வெறியர்கள் இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் கிராமங்களை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் தான் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே சாதி ஆதிக்கம் கிராமங்களில் ஒழிகின்ற வரை உண்மையான சுதந்திரம் என்பது இந்த நாட்டு மக்களுக்கு ஒருபோதும் கிடைக்கப்போவது இல்லை.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தேசியக்கொடி ஏற்றுவதற்கு அனுமதி இல்லாமல் ஒரு சுதந்திர தினம் இந்த நாட்டில் கடைபிடிக்கப் படுகிறது என்று சொன்னால் அதைவிட அவமானம் வேறு என்ன இருக்க முடியும்?

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 18th August 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN